# வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு

# இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் (தனியார்) லிமிடெட்

SLFEA

# வெற்றிட அறிவித்தல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் (தனியார்) லிமிடெட் என்பது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முழுமையான அரசுக்கு சொந்தமான துணை நிறுவனமாகும். இது வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் கீழ் இயங்குகிறது.

பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆற்றல்மிக்க, செயல்திறன் மிக்க, தகுதியுள்ள மற்றும் அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் (தனியார்) லிமிடெட் விண்ணப்பங்களை வரவேற்கிறது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஆட்சேர்ப்பு மற்றும் விமான டிக்கெட் நடவடிக்கைகளில் அனுபவம் இருப்பது கூடுதல் தகுதியாகக் கருதப்படும்.

**வெற்றிடங்களின் பட்டியல்**

| வ. எண் | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | சம்பள அளவு | வயது எல்லை | தகுதி |
|---|---|---|---|---|---|
| 1 | பொது முகாமையாளர் | 1 | HM 1-3 – 2025, ரூபா (152,500 - 15x 4,100- 214,000.00) | 35 வயதிற்கு குறையாத வராகவும் 55 வயதிற்கு மிகாத வராகவும் இருத்தல் வேண்டும். | ஒவ்வொரு பதவிக்குமான தேவையான தகுதிகள் மற்றும் பணிப்பரப்பு ஆகியவற்றை www.slfea.lk என்ற இணையத ளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். |
| 2 | பிரதி பொது முகாமையாளர் | 1 | HM 1-1 – 2025 ரூபா (140,640- 15 x 4,100 - 202,140) | | |

**சம்பளம்:**

முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கை இலக்கம் 01/2025 இன் நிபந்தனைகளின்படி, மேற்கூறிய சம்பள அளவிற்கான உரித்து நியமனத் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும். மேலும் மூன்று கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படும் சம்பள அதிகரிப்புகளுக்கு இணங்க, நியமனம் பெறும் ஆண்டிற்கான உரிய சம்பளம் மற்றும் ஏனைய அரசு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுடன் செலுத்தப்படும்.

**ஏனைய அனுகூலங்கள்:**

- **எரிபொருளுடன் ஓர் வாகனத்தை பாவிக்கும் தகைமை**
- **தொழில்சார் கொடுப்பனவு**
- **வாழ்க்கைச் செலவுப்படி**
- **வருகைகக்கான கொடுப்பனவு**
- **மருத்துவ காப்புறுதி**

**தெரிவு முறை:**

உயர்ந்த தகுதி மற்றும் துறையில் அனுபவத்தின் அடிப்படையில் பட்டியலிடப்படும் விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். நேர்முகத் தேர்வில் வெளிப்படுத்தப்படும் திறமையின் அடிப்படையில் தெரிவு அமையும்.

**நியமனத்தின் தன்மை:**

நிரந்தரமானது. ஊழியர் சேமலாப நிதி (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) ஆகியவற்றிற்கான உரித்துடையது.

**ஆட்சேர்ப்பு முறை:**

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்து, நியமன அதிகாரியால் நியமிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுச் சபையினால் நடத்தப்படும் தகுதி மதிப்பீட்டு நேர்முகத் தேர்வில் அதிகூடிய மொத்தப் புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் அந்தந்தப் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட SOR (ஆட்சேர்ப்புத் திட்டம்) இன் படி புள்ளி வழங்கும் திட்டத்திற்கு இணங்க தகுதியை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகத் தேர்வு நடைபெறும். நியமனத்தின் நடைமுறைத் திகதி SLFEA இன் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும்.

**பொதுவான தேவைகள் மற்றும் தகவல்கள்:**

- இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்குரிய கடமைகளைச் சரியாகச் செய்வதற்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பதவி, உறைக்கு மேலதிகமாக இடதுபுற மேல் மூலையில் குறிப்பிடப்பட வேண்டும்.
- விண்ணப்பப்படிவத்தை SLFEA இணையதளத்திலிருந்து (www.slfea.lk) பதிவிறக்கம் செய்யலாம்.
- ஒவ்வொரு பதவிக்குமான தகுதிகளை SLFEA இணையதளத்திலிருந்து (www.slfea.lk) பதிவிறக்கம் செய்யலாம்.
- தெரிவு செய்யப்பட்டால், SLFEA குறிப்பிட்ட திகதியில் கடமைகளைப் பொறுப்பேற்க விண்ணப்பதாரர் பொறுப்புடையவராவார்.
- மேற்கூறிய பதவிகளை நிரப்புவதற்கு அல்லது வெற்றிடமாக விடுவதற்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் (தனியார்) லிமிடெட் தனக்குரிய உரிமையைத் தக்கவைத்துக் கொள்கிறது.
- வயது எல்லையானது விண்ணப்பங்கள் முடிவடையும் திகதியன்றே கருத்திற்கொள்ளப்படும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களை (SLFEA இன் விண்ணப்பப்படிவம்), அனைத்து கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகள் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு 2026 ஜுன் 15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கலாம். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனம் (தனியார்) லிமிடெட்,**
**இல. 12 நாரஹேன்பிட்ட வீதி, நாவல.**
**தொலைபேசி : +94112807400.**
**பெக்ஸ்: +94112808200 மின்னஞ்சல் : gm@slfea.lk**